# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை - 2016

# புலமைச்சிரத்தைக்கு உட்படாத தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்
## (தனிப்பாடற்றிரட்டினை முன்னிறுத்திய நோக்கு)


பேருரை வழங்குபவர் :

கலாநிதி எஸ் சிவலிங்கராஜா

ஓய்வுநிலைப் பேராசிரியர்
முன்னாள் தலைவர்,
தமிழ்த்துறை, கலைப்பீடம் ,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


19.05.2016

# பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை - 2016

## 'புலமைச் சிரத்தைக்கு உட்படாத தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்'

## (தனிப்பாடற்றிரட்டினை முன்னிறுத்திய நோக்கு)

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

பேருரை வழங்குபவர்

**கலாநிதி எஸ் சிவலிங்கராஜா**
ஓய்வுநிலைப் பேராசிரியர்
முன்னாள் தலைவர்,
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

290274

**19.05.2016**

290274

Donated by
Arulanantham Srikan
Former Librarian
University of



பேராசிரியர் சு.வித்தியானந்தன்

**Prof.S.Vithiananathan**

## அறிமுகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும் ஈழத்தின் முதுபெரும் தமிழறிஞர்களில் ஒருவருமான பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வருடம் தோறும் நடாத்தப்படும் நினைவுப் பேருரையினை இவ்வருடம் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் மாணவரும் அவர் மீது நிறைந்த அபிமானமும் கொண்ட முன்னாள் தமிழ்த்துறை பேராசிரியரும் முன்னாள் தமிழ்த்துறை தலைவருமாகிய கலாநிதி சிவலிங்கராஜா அவர்கள் ''புலமைச்சிரத்தைக்கு உட்படாத தமிழ்க்கவிதைப்பாரம்பரியம்'' என்னும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் அறிஞர்களால் பெரிதும் ஆராயப்படாத நூலாக விளங்குகின்ற தனிப்பாடற்றிரட்டு நூலைப்பற்றி அமையப்பெற்ற இவ் நினைவுப்பேருரை பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக்கும் உவப்பானதாக இருக்கும் என நம்புகின்றேன். அவ்வப்போது பேச்சாளர்களால் தனிப் பாடற்றிரட்டுப் பாடல்கள் மேற்கோள் காட்டபட்டனவேயன்றி அவை நுண்ணியதாக ஆய்வு செய்யப்படவில்லை. பழந்தமிழ் இலக்கியங்களில் சிறப்பாக கவிதை துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட கலாநிதி சிவலிங்கராஜா அவர்கள் இந்த உரையை நிகழ்த்துவது சாலச்சிறந்ததாகும்.

தமிழை ஒரு பாடமாக பயிலும் மாணவர்கள் மரபு வழி தமிழ் இலக்கியங்களிலும் பழந்தமிழ் கவிதைகளிலும் நாட்டம் கொள்ளாத இக்காலகட்டத்தில் இத்தகைய தலைப்பு மிகவும் பொருத்தமானது என்றே கருதுகின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசத்தினம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பேராசிரியர் சு. வித்தியானந்தன்

- 1924ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி சுப்பிரமணியம் முத்தம்மா தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வனாகப் பிறந்தார்.
- ஆரம்பக்கல்வி : வீமன்காமம் தமிழ்ப்பாடசாலை
- இடைநிலைக்கல்வி : யூனியன் கல்லூரி
- உயர்கல்வி : யாழ் - பரியோவான் கல்லூரி, இந்துக்கல்லூரி
- 1941ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1944 இல் தமிழ் சிறப்புப் பட்டதாரியாக விஷேஷ சித்தியுடன் வெளியேறினார்.
- பேராசிரியர்கள் சுவாமி விபுலானந்தர், கணபதிப்பிள்ளை ஆகியோரின் வழிகாட்டலில் முதுகலைமாணிப் (M.A) பட்டத்தினைப் பெற்றார். இதே ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.
- 1948ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகம் சென்று கலாநிதிப் பட்டம் பெற்று 1950ஆம் ஆண்டு நாடுதிரும்பினார்.
- 1967 இல் இணைப்பேராசிரியர் ஆனார்.
- 1970 இல் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நான்காவது தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.
- 1977 இல் இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தலைவராக நியமனம் பெற்றார்.
- 1979ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரானார்.
- 1989 இல் அமரரானார்.

## புலமைச் சிரத்தைக்கு உட்படாத தமிழ்க்கவிதைப் பாரம்பரியம் :

தனிப்பாடற்றிரட்டினை முன்னிறுத்திய நோக்கு

## A Poetical Tradition that has not received academic attention:

## A Study based on *Thanipaadal Thiraddu.*

இலக்கியங்களைத் துணைக்கொண்டு சமூகத்தைப் பார்க்கும் நோக்குநிலை தமிழ்மக்கள் மத்தியிலே 19ஆம் நூற்றாண்டள விலேதான் தொடங்குகின்றது எனலாம். ஏதோ ஒரு அளவில் ஏதோ ஒரு வகையில் இலக்கியம் சமூகத்தைப் பிரதிபலிக்கும் என்பதிற் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. இந்தவகையிலேதான் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களை முன்னிறுத்தி அக்காலச் சமூகத்தை நோக்க விரும்புகின்றோம்.

**முன்னுரை**

தனிப்பாடற்றிரட்டு எனப் பல தொகுதிகள் வெளிவந்துள்ளன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தனிப்பாடற்றிரட்டுத் தொகுதிகள் பல வெளிவந்துள்ளன. இவற்றிடையே முரண்பாடுகளும் குறை பாடுகளும் இல்லாமல் இல்லை.

தமிழ் இலக்கியவரலாற்றிலே தனித்தனிப் பாடல்களைத் தொகுக்கும் முயற்சிக்கு நீண்டதோர் பாரம்பரியம் உண்டு. வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு சூழல்களில், வெவ்வேறு காலங்களிற் தோன்றிய பாடல்களின் தொகுப்பே பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள் என்பர். இந்தவகையிலேதான் பக்திப்

பாடல்களையும் இணைத்து நோக்கியுள்ளனர். சம காலத்திலும் வெவ்வேறு கவிஞர்கள் வெவ்வேறு காலங்களிற் பாடிய பாடல்களைத் தொகுக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதை அவதானிக்கலாம். பாடல்களைத் தொகுக்கும் முயற்சிக்குச் சமூக, பொருளாதார, அரசியற் காரணிகளும் பின்னணியாக அமைவதுண்டு. தொகுத்தோன், தொகுப்பித்தோன் பிரச்சினைகள் சங்கத் தொகுப்பில் இருந்து சமகாலத் தொகுப்புக்கள் வரை தொடர்வதை அவதானிக்கலாம். தனிப்பாடற்றிரட்டும் இந்தப் பிரச்சினைக்கு உட்படுவதை இலகுவாக மறுத்துவிட முடியாது.

**தனிப்பாடற்றிரட்டுக்கள்**

ஆங்காங்கு காலத்துக்குக் காலம் செவிவழியாகக் கையளிக்கப்பட்டு வந்த பாடல்களும், ஏடுகளிலே எழுதி வைத்திருந்த பாடல்களும் அச்சுவசதி ஏற்பட்டதும் தொகுதிகளாக வெளிவரத் தொடங்கின. கணக்காயர்கள் தமது மரபுவழிக் கல்விப் போதனையினூடு கையளித்து வந்த பாடல்களும் மாணாக்கர் மத்தியிற் பரவியிருக்கக் கூடும். இவற்றையெல்லாம் கற்றறிந்த அறிஞர்கள் ஆர்வ மிகுதியினாலும், பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலும் தேடித் தொகுத்துத் தனிப்பாடற்றிரட்டு என்னும் பெயரிலே வெளியிட்டார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலேதான் இத்தகைய தொகுப்புக்கள் பெருமளவுக்கு வெளிவரத் தொடங்கின. புலவர்கள் பற்றி வழங்கிவந்த செவிவழிக் கதைகளைப் பதிவுசெய்வதும் அவர்களது பாடல்களைப் பாதுகாப்பதும் இவற்றின் தொகுப்பாளர்களின் பிரதான நோக்கமாக இருந்தது எனக்

குறிப்பிடலாம். தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடற்றிரட்டு, தனிச்செய்யுட் சிந்தாமணி, பெருதொகை முதலான தொகுப்புக்கள் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கினைப் பெற்றன. பலர் தனிப்பாடல்களைத் தொகுத்து உரையெழுதி வெளியிட்டமையும் பல பதிப்புக்கள் வெளிவந்தமையும் இத்தொகுப்பு நூல்களுக்கு மக்கள் மத்தியில் இருந்த பெருஞ்செல்வாக்கே காரணம் எனலாம்.

இந்த முயற்சியில் ஈடுபட்ட தொகுப்பாசிரியர்கள் எந்த முறையியலைக் கையாண்டார்கள் என்று தெளிவாகக் கூறமுடியாதுள்ளது. அச்சுவாகனத்தில் ஏற்றிவிட வேண்டும் என்ற எண்ணமே இவர்களிடம் மேலோங்கிக் காணப்பட்டது. தமிழ் இலக்கியவரலாற்றுக் காலப் பின்னணியிலே தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களின் காலம் என ஒரு வரையறை செய்வது கடினமானது. சங்கப்பாடல்கள் தொடக்கம் 19ஆம் நூற்றாண்டுப் பாடல்கள்வரை இத்தொகுப்புக்களிலே இடம்பெற்றுள்ளன. (சில 20ஆம் நூற்றாண்டுப் பாடல்களும் உள)

தனிப்பாட்றிரட்டுக்களிலே இடம்பெற்றுள்ள பாடல்கள் கால வரையறையை விடப் புலவர்களின் முதன்மைத் தன்மைக்கு இடம் கொடுத்துள்ளமையையும் அவதானிக்க முடிகிறது. அதிகமான பாடல்களைப் பாடிய புலவர்களை முதன்மைப்படுத்தித் தொகுக்கப்பட்ட திரட்டுக்களும் உள. ஒரே பெயரில் பல புவர்கள் காலத்துக்குக் காலம் வாழ்ந்துள்ளனர். உதாரணமாக ஔவையார் என்ற பெயரிலே பல புலவர்கள் காலத்துக்குக் காலம் வாழ்ந்துள்ளனர். தனிப்பாடற்றிரட்டுக்களிலே இவர்கள் எல்லோரும் ஒரே புலவரே எனக் கருதித் தொகுக்கப்பட்டுள்ளமையைக்

கண்டுகொள்ள முடிகின்றது. இவ்வாறே கபிலர், பரணர், நக்கீரர் முதலான பெயர்களில் வெவ்வேறு புலவர்கள் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்துள்ளனர் என்பதைத் தொகுப்பாசிரியர்கள் அறியாமல் இவர்கள் யாவரையும் பெயர் அடிப்படையிலே ஒருவராகக் கருதிப் பாடல்களைத் தொகுத்துள்ளனர்.

தனிப்பாடற்றிரட்டுக்கள் முதலாம் பாகம், இரண்டாம் பாகம் எனவும் தனிப்பாடற்றிரட்டு எனவும் பல தொகுப்புக்கள் வெளி வந்துள்ளன. தனிப்பாடற்றிரட்டுத் தொகுதிகளிலே முதற்பாகமே சிறப்பானதாகக் காணப்படுகின்றது. இரண்டாம் பாகத்திலே இடம்பெறும் பாடல்கள் எல்லாவற்றையும் சிறப்பான பாடல்கள் என்று சொல்லமுடியாது. எனினும் முதற்பதிப்பின் போது விடுபட்ட, அல்லது கிடைக்காமற்போன சில பாடல்களையும் இரண்டாம் பதிப்பிலே சேர்த்திருக்கின்றார்கள். உதாரணமாகக் கம்பனின் சில சிறப்பான பாடல்கள் இரண்டாம் பதிப்பிலே உள்ளமையைச் சுட்டிக்காட்டலாம். அச்சியந்திர வசதி, கல்வி அபிவிருத்தி, பழமையைப் போற்றிப் பேணவேண்டும் என்ற மனநிலை, புலவர்களின் வாழ்க்கை பற்றி நிலவிய செவிவழிக் கதைகளை அறியவேண்டும் என்ற ஆர்வம், பாடல்களின் சுவையால் ஈர்க்கப்பட்டமை, கல்லூரிகளிலே தனிப்பாடல்கள் கற்பிக்கப்பட்டமை முதலான காரணிகளால் தனிப்பாடற்றிரட்டுக்கள் பல வெளிவந்தன எனலாம்.

**சந்திரசேகர கவிராச பண்டிதர் என்பவர் (1883) பொன்னுசாமித்தேவர் விருப்பப்படி தனிப் பாடல்களைத் திரட்டி அச்சிற் பதிப்பித்துள்ளார்.**

**1878ஆம் ஆண்டு சந்திரசேகர கவிராயர் பதிப்பு**

**வெளிவந்தது. 1888 இல் வேறு ஒரு தனிப்பாடற்றிரட்டு வெளிவந்ததாகவும் அறிய முடிகின்றது.**[1]

புகழ்பெற்ற தமிழறிஞர்கள் உரையெழுதி "நூதனமாகத் தொகுத்து" வெளியிட்ட தனிப்பாடற் திரட்டுக்களிலேயும் முரண்பாடுகளும் குறைபாடுகளும் இல்லாமல் இல்லை. "இதற்கு முன் வந்த தொகுப்புக்களிலும் பார்க்க" இதிலே புதிய சில செய்யுள்கள் சேர்க்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டிருப்பதால் நமது கண்ணுக்குப்படாமற் போன தனிப்பாடற்றிரட்டுக்களும் இருந்திருக்கின்றன என எண்ண முடிகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலே சில புத்தக வியாபார நிறுவனங்கள் வித்துவான்களை அணுகித் தனிப்பாடல்களைத் தொகுப்பித்து அவற்றுக்கு உரையும் எழுதுவித்து அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். பொதுமக்கள் மத்தியிலே புலவர்களின் வரலாற்றையும் புலவர்களின் புலமை ஊடாட்டத்தினையும் அறியும் ஆர்வம் அதிகரித்தமையினாலே தமிழ்ப்புலவர் சரித்திரம், தமிழ் நாவலர் சரிதை, பாவலர் சரித்திர தீபகம் முதலான புலவர் வரலாறு கூறும் நூல்களும் தோன்றின. இந்நூல்களில் இடம்பெற்ற பாடல்கள் தனிப்பாடற்றிரட்டுக்களிலும் இடம்பெற்றன. தனிப்பாடற்றிரட்டில் இடம்பெற்ற பாடல்களும் புலவர் வரலாறு கூறும் நூல்களிலும் இடம்பெற்றன. அத்துடன் தனிப்பாடற்றிரட்டினைத் துணைக்கொண்டு தனித்தனிப் புலவர்களின் பாடற்றொகுப்பு நூல்களும் வெளிவந்தன. உதாரணமாக ஔவையார், கம்பன், காளமேகம் முதலானவர்களின் பாடல்கள் தனித்தனி நூல்களாக வெளிவந்தன.

தனிப்பாடற்றிரட்டுக்களில் இடம்பெற்ற புலவர் வரலாறுகளையும் செவிவழிச் செய்திகளையும் உள்வாங்கிப் புனைவு நூல்களும் இக்காலத்திலே வெளிவந்தன. புலவர்கள் அவ்வப்போது பாடிய பாடல்களுக்கு விளக்கம் தந்து சனரஞ்சகத் தன்மையுடன் எழுந்த நூல்களுக்கு உதாரணமாக வினோதரசமஞ்சரியைக் குறிப்பிடலாம். வினோதரசமஞ்சரி எனும் கற்பனைப் புனைவுக்குள்ளே செவிவழியாக வந்த கதைகளும் இடம்பெற்றமையினால் சாதாரண மக்கள் இவற்றை உண்மைக் கதைகள் என்றே நம்பினர். நமது இலக்கிய வரலாற்றைக் கட்டமைக்கும் போது இவற்றின் தாக்கமும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்திலே புகழ்பெற்று விளங்கிய அறிஞர்கள் பலர் தனிப்பாடற்றிரட்டுத் தொகுப்புக்களுக்குச் சாற்றுகவியும் பாடியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனிப்பாடற்றிரட்டுக்கள் பல வெளிவந்த போதிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் வெளிவந்த தனிப்பாடற்றிரட்டுக்களையே இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தி உள்ளோம். குறிப்பாகக் கா.சுப்பிரமணியபிள்ளை தொகுத்து உரையெழுதி வெளியிட்ட தனிப்பாடற் திரட்டுக்களையே முதன்மைச் சான்றுகளாகப் பயன்படுத்தி உள்ளோம். தேவையேற்படுமிடத்து மற்றைய தனிப்பாடற் திரட்டுக்களும் ஒப்பு நோக்கி உணர்த்தப்பட்டுள்ளன.

சங்கப் பாடல்கள் தொடக்கம் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலே தோன்றிய பாடல்கள் வரை இத்திரட்டுக்களிலே இடம்பெற்றுள்ளன. கபிலர், நக்கீரர்,

இறையனார், ஔவை முதலிய பழந்தமிழ்ப் புலவர்களின் பாடல்களையும் தனிப்பாடற்றிரட்டுக்களிலே தொகுத்துள்ளனர். அத்துடன் திருவள்ளுவர், இடைக்காடர் ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோரின் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

உதாரணமாக "ஆடுநனிமறந்த கோடுயரடுப்பில் ஆம்பி பூப்பத் தேம்பசியுழவா" எனத் தொடங்கும் சங்கப்பாடல் தனிப்பாடற்றிரட்டிலே ஒப்பிலாமணிப் புலவர் என்ற பிற்காலப் புலவரின் பெயரிலே இடம்பெற்றுள்ளது. இதுபற்றிப் பின்னர் விரிவாகக் கூறுவோம். இரட்டையரின் பாடல் என்று கருதும் பாடல் ஒன்றும் ஒப்பிலாமணிப் புலவரின் பெயரிலே தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு முரண்பாடுகள், வரலாற்றுத் திரிபுகள் பல தனிப்பாட்றிரட்டிலே பரவிக் காணப்படுகின்றன.

தனிப்பாடற்றிரட்டு முதலாம் பாகத்திலே 870 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை முப்பத்தைந்து புலவர்கள் பாடியுள்ளனர். எண்ணிக்கை அடிப்படையிலே காளமேகப்புலவரின் பாடல்களே அதிகமாகக் காணப்படுகின்றன. (முதலாம் பாகத்தில்) பின்வரும் புலவர்களின் பாடல்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

- காளமேகப்புலவர் - 187
- கடிகைமுத்துப்புலவர் - 107
- ஔவையார் - 70
- கம்பர் - 68
- நாகூர் முத்துப்புலவர் - 50
- ஒட்டக்கூத்தர் - 40
- பலபட்டைச் சொக்கநாதப்புலவர்- 65

அதிகமான பாடல்கள் எழுதிய புலவர்களையே மேலே குறிப்பிட்டோம். மற்றைய புலவர்கள் இருபது, முப்பது, ஜம்பது, பத்து என்ற எண்ணிக்கையிலே பாடியுள்ளனர். ஓரிரு பாடல்கள் பாடிய புலவர்களின் பாடல்கள் கவிச்சுவை நிரம்பியவையாகக் காணப்படுகின்றமையையும் குறிப்பிட வேண்டும். உதாரணமாகச் சத்திமுத்தப்புலவரின் இரண்டே இரண்டு பாடல்களே இடம் பெற்றுள்ளன. இவரின் "நாராய் நாராய் செங்கால் நாராய்"[3] என்ற பாடல் மிகப் புகழ்பெற்ற பாடலாகும்.

தனிப்பாடற்றிரட்டுக்களிலே இடம்பெறும் பாடல்களைக் கால அடிப்படையிலே வகுத்து நோக்குவது மிகவும் கடினமானது. இப்பாடல்கள் எந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டன?, எந்த அடிப்படையிலே பெறப்பட்டன? எந்த முறையியல் கையாளப்பட்டது என்பன பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை.

தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களினூடு அக்காலச் சமூக நிலையைத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். ஆனால் தமிழியல் ஆய்வாளர்களால் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்கள் பற்றிய ஆய்வுச்சிரத்தை அதிகம் இருந்ததாகத் தெரியவில்லை. கதாப்பிரசங்கங்களிலும் கதைகூறும் இடங்களிலும் இப்பாடல்கள் பயின்று வந்தனவேயன்றி ஆய்வுநோக்கில் - சமூக, பொருளாதார, அரசியல், இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் இப்பாடல்கள் ஆய்வு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களை ஆய்வுசெய்து அக்காலச் சமூக வாழ்வியலையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரவேண்டியது நமது கடமையாகும். தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களை ஆய்வு வசதி கருதிப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

- முற்காலம்
- இடைக்காலம்
- பிற்காலம்

**முற்காலப்பாடல்கள்**

முற்காலப் பாடல்களாகக் கபிலர், பரணர், நக்கீரர், இறையனார், ஔவையார் (முற்கால ஔவை), திருவள்ளுவ நாயனார், இடைக்காடர் முதலானோர் பாடல்களைக் குறிப்பிடலாம். அத்துடன் நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடல்களையும் முற்காலம் என்ற பகுப்பினுள்ளேயே சேர்த்துள்ளோம். இவர்களின் இப்பாடல்கள் பற்றிப் பல ஆய்வுகள் ஏலவே வெளிவந்துள்ளன. இதனாலே இவைபற்றி விரிவாக நோக்குவதைத் தவிர்த்தோம்.

**இடைக்காலப் பாடல்கள்**

இடைக்காலப் பாடல்கள் எனக் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, பிற்கால ஔவையார் முதலியோரது பாடல்களைக் குறிப்பிடலாம். பெரும்புலவர்களான இவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், செவிவழிக் கதைகளையும், ஓரளவுக்கு வரலாறுகளையும் தனிப்பாடற்றிரட்டுப் புனைந்து கூறுகின்றது. பேரிலக்கியம் படைத்தவர்களின் உதிரியான (அவ்வப்போது பாடிய) பாடல்களே இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றினூடு இவர்களுடைய சொந்தவாழ்வு நிகழ்ச்சிகள், இவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள், தமது காலப் புலவர்களிடையே இவர்களுக்கு இருந்த போட்டிகள், பிணக்குகள், அரசியற் பின்னணி, கல்விப்புலமை முதலியவற்றைக் கண்டுகொள்ள முடிகின்றது. தனிப்பாடற்றிரட்டுக் கூறும் சம்பவங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் முற்றாக நிராகரித்து விடவும் முடியாது.

தனிப்பாடற்றிரட்டு நூலிலே புகழேந்தியின் பாடல்கள் தனியாக இடம்பெறவில்லை. ஒட்டக்கூத்தர், கம்பர், ஔவையார் முதலியோரின் போட்டிப்பாடல்கள் இடம்பெறுகின்ற இடத்திலேயே புகழேந்தியின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நளவெண்பா எனும் சிறந்த இலக்கியத்தைப் படைத்த புகழேந்தி பாண்டியநாட்டு, அல்லது பாண்டியனின் அவைக்களப் புலவனாக இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகின்றது. கம்பன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஔவை முதலியோர் தத்தமக்குச் சார்பான அரசுகளை, அரசனை வாழ்த்திப்பாடும் பாடல்கள் பல இத்திரட்டுக்களிலே இடம்பெற்றுள்ளன. ஆளும் வர்க்கத்திற்கு அனுசரணையாகப் பாடிய பாடல்களோடு அரசனை விமர்சித்து, அரசை விமர்சித்துப் பாடிய பாடல்களும் இல்லாமல் இல்லை. பேரரசும், பெருங்காவியங்களும் தோன்றிய காலப்பகுதியிலே வாழ்ந்த இப்புலவர்கள் பெருங்கவிஞர்களாக விளங்கியபோதிலும் அவர்கள் வாழ்வின் மறுபாதி தனிப் பாடல்களினூடேதான் தெரியவருகின்றது.

அரசவைக் கவிஞர்களாக விளங்கியவர்களுக்கும் மற்றைய புலவர்களுக்குமிடையே நிலவிய போட்டி, பொறாமை, பிரச்சினைகள் இத்தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களிலே பதிவாகி யுள்ளன. அரசவைப் புலவனான ஒட்டக்கூத்தனுக்கும் மற்றைய புலவர்களுக்குமிடையே இருந்த உறவு பற்றிய பிரச்சினைகள் இலக்கிய வரலாற்றாய்வாளர்களால் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படாமையும் குறிப்பிடத்தக்கது.

இடைக்காலப் புலவர்கள் அரசனைப் பாடியது போலவே சிற்றரசர்களையும் நிலவுடைமையாளர்களையும். பிரபுக்களையும்

ஏற்றியும் போற்றியும் துதித்தும் பாடியுள்ளனர். இவர்கள் பொருட்தேவை உடையவர்களாகவே வாழ்ந்தார்கள் என்பதை இவர்களது பாடல்கள் புலப்படுத்துகின்றன. இப்பாடல்களிற் பெரும்பாலானவை மிகவும் சுவை நிரம்பியவை. பலவற்றை உதாரணமாகக் காட்டலாம். எனினும் கம்பனின் பெயரால் வழங்கும் ஒரு பாடலை மட்டும் சுட்டிக்காட்டுகின்றோம்.

**"தேருளைப்புரவி வாரணத்தொகுதிதிறை கொணர்ந்து வருமன்னநின்**
**தேசமேதுனது நாமமேதுபுகல், செங்கையாழ்தடவு பாணகேள்**
**வாருமொத்தகுடி நீருநாமுக தேவனாறை நகர்காவலன்**
**வாணபூபதி மகிழ்ந்தளிக்கவெகு வரிசைபெற்றுவரு புலவன்யான்**
**நீருமிப்பரிசு பெற்று மீளவர லாகுமேதுமவன் முன்றில்வாய்**
**நித்திலச்சிகர மாடமாளிகை நெருங்கு கோபுர மருங்கெலாம்**
**ஆருநிற்க முயர்வேம்பு நிற்கும் வளர் பனையுநிற்குமதன் அருகிலே**
**அரசுநிற்க மரசைச்சுமந்தசில அத்திநிற்கும் அடையாளமே"[1]**

ஒட்டக்கூத்தர் முதலான அரசவைக் கவிஞர்கள் சோழப் பேரரசர்களையே புகழ்ந்துபாடக் கம்பன், சடையப்பவள்ளல் முதலான நிலவுடைமையாளர்களையும் பேரரசுக்குப் பணிந்து ஆட்சிசெய்யும் சிற்றரசர்களையுமே பெரிதும் புகழ்ந்து பாடியுள்ள மையைத் தனிப்பாடற்றிரட்டு மூலம் கண்டுகொள்ள முடிகிறது. கம்பனின் ஆறை என்னும் ஊரின் சிற்றரசனான ஏகம்பவாணன்மேற் பல பாடல்களைப் பாடியுள்ளான். வாணனது கொடை, அவனது படை, ஆட்சிச் சிறப்பு முதலானவற்றை விதந்து பாடுவது ஒரு வகையிற் சோழப் பேரரசர்களுக்கு எதிரான குரலாகவே இருக்கலாம் போலத் தெரிகிறது. வேறும் சில புலவர்கள் ஏகம்பவாணன் என்ற சிற்றரசனைப் புகழ்ந்து பாடியுள்ளபோதிலும் கம்பன் பாடிய

பாடல்களே அதிகமாகக் காணப்படுகின்றன. தன்னை ஒரு பாணனாகக் கருதி (அல்லது இரவலர்களுக்காகப் பரிந்து) பாடிய பாடல்கள் கவித்துவச் சிறப்பு மிக்கவை. வகைமாதிரிக்கு ஒன்றைச் சுட்டிக்காட்டலாம் :

**"உலைக்குரிய பண்ட முவந்திரக்கச் சென்றால்**
**கொலைக்குரிய வேழும் கொடுத்தான் - தலைக்குரிய**
**வாணர்கோ னாறை மகதேவனுக்கிந்தப்**
**பாணனோ டென்ன பகை"**[5]

இத்தகைய பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. பிற்காலப் புலவர்கள் பலர் இந்தக் கருத்துநிலையை வெவ்வேறு விதமாகப் பாடியமையையும் தனிப்பாட்றிரட்டிலே காணமுடிகின்றது.

ஏகம்பவாணன் என்னும் சிற்றரசனைப் பெரிதும் புகழ்ந்தமையும் பேரரசர்களுக்கு இவன்மீது கோபத்தை உண்டாக்கியிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. கம்பனும் வேண்டுமென்ற இவ்வாறு பாடியிருக்கலாம்.

கம்பனின் பெயரால் வழங்கும் பல பாடல்கள் மிகவும் சுவை நிரம்பியவை. மாகவிஞனாக விளங்கிய கம்பனது கவித்துவ ஆற்றலைப் புலப்படுத்தும் இராமாயணம் பற்றியும் அதன் அரங்கேற்றம் பற்றியும் செவிவழிக் கதைகள் பல தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெற்றுள்ளன. கம்பனின் மகனாகிய அம்பிகாபதி, அமராவதி காதல் பற்றிய கதைகளையும் தனிப்பாடற்றிரட்டு விரிவாகப் பேசுகிறது. அம்பிகாபதியின் பெயரால் இடம்பெறும் பாடல்களைப் பார்க்கும் போது அவனும் சிறந்த

கவிஞனாகவே விளங்கியுள்ளான் என்பது புலனாகும். அரச குடும்பத்திற்கும் புலவர் குடும்பத்திற்கும் இடையே நிகழ்ந்த வர்க்கவேறுபாட்டுப் போராட்டத்தினையும் இக்கதைகளினூடு கண்டுகொள்ளலாம். அரசுக்கு அடிபணியாத புலமைத்துவ ஆளுமை கம்பனிடம் இருந்தது என்பதைத் தனிப்பாடல்கள் பலவற்றினூடு காணமுடிகின்றது. அரசன் கம்பனை நாடுகடத்தியபோது கம்பன் பாடிய,

**"மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ**
**உன்னையறிந்தோ தமிழை ஓதினேன் - என்னை**
**விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ**
**குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு**
**காத மிருபத்து நான்கொழியக் காசினியை**
**ஓதக் கடல்கொண்டொளித்ததோ - மேதினியில்**
**கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா நீமுனிந்தால்**
**இல்லையோ எங்கட் கிடம்"**

இப்பாடல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றிலே மிகவும் புகழ்பெற்றவை. கம்பனின் தனிப்பாடல்கள் பல அவனின் புகழுக்கும் பெருமைக்கும் சான்றாக அமைகின்ற அதேவேளை அத்தொகுப்பில் இடம்பெறும் சம்பவங்கள் சில அவனுக்கு மாசு கற்பிப்பவையாக அமைவதையும் அவதானிக்க முடிகின்றது. சடையப்பவள்ளல் முதலான பல வள்ளல்களைப் புகழ்ந்து பாடிய கம்பன் சிலரைப் பழித்துப் பாடியுள்ளமையையும் காணமுடிகின்றது. கம்பன் பற்றிய இக்கதைகளை நோக்கும் போது அக்காலச் சமூக, சமய, அரசியல், கல்வி நிலைகளைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது. இக்கதைகளின் பின்னணியிலே சைவ வைஷ்ணவப் பிரச்சினை,

சமூக, சாதிப்பிரச்சினை, ஆளும் வர்க்கத்தினரின் அரசியற் போட்டிப் பிரச்சினை, புலவர்களிடையே இருந்த முரண்பாடு முதலியன இருந்திருக்கின்றன எனக் கருதலாம். கம்பனின் மரணம் பற்றி வழங்கும் கதை புனையப்பட்ட கற்பனைக் கதையாக இருக்கவேண்டும். அந்த மரணத்தோடு தொடர்புடையதாக வரும் பாடல் மிகவும் புகழ்பெற்றது மாத்திரமன்றி நெஞ்சைத் தொடுவதாகவும் அமைகின்றது.

**"வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு**
**வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம் - வில்லம்பு**
**பட்டதடா என்மார்பிற் பார்வேந்தா நின்குலத்தைச்**
**சுட்டதடா என்வாயிற் சொல்"**

பெரும்புலவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றி புனைந்துரைகள் நிறையவே வெளிவரும் என்பதற்குச் சான்றாகவே கம்பன் பற்றிச் சற்று விரிவாகக் குறிப்பிட்டோம். பொய்யும் மெய்யும் கலந்து புனையப்பட்ட இத்தகைய கதைகள் ஒட்டக்கூத்தர், ஔவையார், புகழேந்தி முதலியோர் பற்றியும் இடம் பெற்றுள்ளமையைத் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களினூடு கண்டு கொள்ள முடிகின்றது.

**பிற்காலப் பாடல்கள்**

தனிப்பாடற்றிரட்டின் மிக முக்கியமான பாடல்கள் இடம்பெறும் பகுதியாகப் பிற்காலப் பாடல்கள் என்னும் பகுதி அமைகின்றது. தனிப்பாடற்றிரட்டின் தனித்துவமும் பிற்காலப் பாடல்களினூடேதான் தெரியவருகின்றது. தமிழ்நாட்டின்

அரசியலிலே குழப்பங்களும் ஸ்திரத்தன்மையின்மையும் நிலவிய காலப்பகுதியிலே தோன்றிய பாடல்களை அக்காலச் சமூக, பொருளாதார, அரசியற் பண்பாட்டுப் பின்னணியிலே நோக்குவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அகன்ற நிலப்பரப்பைக் கொண்ட தமிழ்நாட்டின் புவியியலையும் மனங்கொண்டே இப்பாடல்களை நோக்கவேண்டும்.

தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களை முன்னிறுத்தி அக்காலச் சமூகச் செல்நெறியைத் தெளிவாக விளக்கியவர்களைக் கண்டுகொள்ள முடியவில்லை. வெவ்வேறு இடங்களிற் பதிவாகாமல் தனிப்பாடற்றிரட்டிலே மட்டும் இடம்பெற்ற (முதலாம் பாகம்) பாடல்களினூடு அக்காலச் சமூக பொருளாதாரச் செல்நெறியை நோக்குவது சுவைபயப்பதாகும். பேரரசின் வீழ்ச்சியின் பின்னர் தமிழரல்லாதவர்களின் ஆட்சியதிகாரம், சிறுசிறு மன்னர்களின் மேலாதிக்கம், நிலக்கிழார்களின் சமூகச் செல்வாக்கு முதலியன இக்கால இலக்கியத்தைப் பெரிதும் பாதித்தமையைத் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களினூடு தரிசிக்க முடிகின்றது. ஓகோ என்று வாழ்ந்த ஒரு சமூகம் பல்வேறு நெருக்கடிக்கும் உள்ளாகித் தமது பண்பாட்டு அமிசங்களையும் பொருளாதாரத்தையும் இழந்து நின்ற நிலையிலே பாடிய பாடல்களிற் பெரும்பாலானவையே தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெற்றுள்ளன என்று கருதுவது தவறாகாது.

சிலேடை, இயமகம், திரிபு, மடக்கு முதலான பாடல்களே பெருமளவுக்குக் காணப்படுகின்றன. நிந்தாஸ்த்துதி என்னும் வடிவம் இக்காலப் பகுதியிலே மிகவும் புகழ்பெற்றதாகக் காணப்படுகின்றது.

நிந்தாஸ்த்துதிக்குப் பின்னாலே சமய, சமூக, பொருளாதார, பண்பாட்டு அமிசங்கள் பல மறைந்திருக்கின்றன. நிந்தாஸ்த்துதி பற்றிக் கூறுமிடத்திலே அவற்றை விரிவாக நோக்குவோம்.

தனிப்பாடற்றிரட்டின் பாடல்களை ஒருசேர நோக்கும் போது அக்காலச் சமூகத்தில் நிலவிய வறுமை, பரத்தமை, விரக்தி உணர்வு, மடங்கள் ஆதீனங்களின் நடைமுறைகள், நிலக்கிழார்களைப் புரவலர்களைப் பாராட்டுதல், பழித்தல், போலிப்புலமை, செவிவழிக்கதைகள், போட்டிகள் புனைவுகள், வரலாறு பற்றிய செய்திகள் முதலானவற்றைக் காணமுடிகின்றது. புலவர்கள் சொன்ன விடயங்களும் சொல்லிய விதமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. நீண்டதொரு தமிழ்க்கவிதைப் பாரம்பரியத்தின் தேய்மானமொன்றையே இத்தொகுப்பிலே இடம்பெறும் பெரும்பாலான பிற்காலப் பாடல்கள் காட்டி நிற்கின்றன. புலவர்களின் சமூக அந்தஸ்து பேணப்படாமையால் அவர்கள் சமூகத்தின் மீது ஒருவகை வக்கிர உணர்வு கொண்டவர்களாகவும் விளங்கினர் என்பதற்குச் சான்றாகப் பாடல்கள் பல உள.

புலவர்களின் வறுமையைப் புலப்படுத்தும் பாடல் மரபு சங்ககாலத்தில் இருந்தே தொடர்ந்து வருகின்றது. அக்காலப் பாடல்களுக்கும் இக்காலப் பாடல்களுக்கும் இடையே நுண்ணிதான வேறுபாடு உண்டு. சங்கப்புலவர்கள் சொல்லிய விதத்திற்கும் பிற்காலப் புலவர்கள் சொல்லிய விதத்திற்கும் இடையே வேறுபாடுகள் உண்டு. சங்கப்புலவர்கள் நேரடியாக அதிக ஆலாபனையின்றித் தம்முடைய வறுமை நிலையினை இயல்பாகவே எடுத்துரைத்தனர். தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களைப் பாடிய

புலவர்கள் தமக்கு முன்தோன்றிய இலக்கியங்களை நன்கு படித்துள்ளனர் என்பது அவர்களது பாடல்களினூடு தெரியவருகின்றது. சங்கப்பாடல்கள், திருக்குறள் முதலானவற்றைப் பல இடங்களிற் பின்பற்றியுள்ளனர். உதாரணங்கள் பலவற்றைக் காட்டலாமேனும் வகைமாதிரிக்குப் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

புறநானூற்றிலே பெருந்தலைச்சாத்தனார் பாடிய பாடலை அப்படியே அடியொற்றி ஒப்பிலாமணிப்புலவர் பாடியுள்ளார். இரண்டு பாடல்களையும் கீழே தருகின்றோம்.

**"ஆடுநனி மறந்த கோடுயரடுப்பின்**
**ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்**
**பாஅ லின்மையிற் தோலோடுதிரங்கி**
**இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை**
**சுவைத்தொறு அழூந்தன் மகத்து முகநோக்கி**
**நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்**
**மனயோா ளெவ்வநோக்கி நினைஇ**
**நிற்படர்ந்சினே நற்போர்க்குமண"**

பெருந்தலைச்சாத்தனாரின் பாடலை அப்படியே அடியொற்றி ஒப்பிலாமணிப்புலவர் பின்வருமாறு பாடுகிறார்.

**"ஆடெரி படர்ந்த கோடுயரடுப்பில்**
**ஆப்பிபூப்பத் தீம்பசியுழல**
**இல்லிதூர்ந்த பொல்லாவறுமுலை**
**சுவைதொறும் சுவைதொறும் பால்காணாமல்**
**குழவி தாய்முகம் நோக்க**

மனைவி என்முகம் நோக்கயாமும்

நின்முகம் நோக்கி வந்தனங் குமணா"[8]

இப்பாடலைப் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். தனிப்பாடற்றிரட்டுப் பாடல்கள் பலவற்றிலே சங்கப்பாடல்கள், திருக்குறள், இடைக்கால, பிற்காலப் பாடல்களின் செல்வாக்கு ஆங்காங்கே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை அவர்களின் கல்விப்புலமையின் வெளிப்பாடு எனக் கொள்ளலாம். இக்காலப்பகுதியிலே புலவர்கள் மதிக்கப்படவில்லை. கல்வி கற்றவர்கள் உதாசீனப்படுத்தப்பட்டனர். விரக்தியும் வேதனையும் தலைகாட்டத் தம்மையும் தாம் பெற்ற கல்வியையும் பழித்து மனம்நொந்து பாடிய பாடல்கள் பல தனிப்பாடற்றிரட்டிலே காணப்படுகின்றன. பலராலும் மேற்கோளாகக் காட்டப்படும் பொற்களத்தைப் படிக்காசுத் தம்பிரானின் பாடலொன்றைச் சான்றாகக் காட்டுவோம்.

"அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக்கல்வி

அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்

திடமுளமோகனமாடக் கழைக்கூத்ததாடச்

செப்பிடு வித்தைகளாடத் தெரிந்தோமில்லை

தடமுலை வேசியராகப் பிறந்தோமில்லைச்

சனியான தமிழைவிட்டுத் தையலர்தம்

இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை

என்னசென்னமம் எடுத்துலகில் இரக்கின்றோமே"[9]

படிக்காசுப்புலவர் எனவும் படிக்காசுத் தம்பிரான் எனவும் அழைக்கப்பட்ட இப்புலவரின் பெயரால் நாற்பது பாடல்கள்

தொகுப்பிலே இடம்பெற்றுள்ளன. மிகப் பிற்காலத்தவரான இவரை இவருக்குப் பின் வந்த புலவர்கள் பலர் பாராட்டிய பாடல்களும் தொகுப்பிலே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பலபட்டைச் சொக்கநாதப்புலவர் "மட்டாருந் தென்களதைப் படிக்காசன்" எனப் பாடிய பாடல் தமிழ்க்கல்வி மரபில் புகழ்பெற்ற பாடலாக விளங்குகின்றது.

தனிப்பாடற்றிரட்டில் இடம்பெறும் பாடல்களினூடு அக்காலக் கல்விமரபினையும் அவர்கள் கற்ற முறைமையையும். கற்ற நூல்களையும் பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. சிற்றரசர்கள், நிலக்கிழார்கள், புரவலர்கள் முதலானவர்களைச் சார்ந்து வாழ்ந்த இப்புலவர்களிற் பலர் கணக்காயர்களாகவும் விளங்கியுள்ளனர். அகன்ற நிலப்பரப்பையுடைய தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் சென்று கற்பித்தும் தம் கல்வித்திறனைக் காட்டியும் வந்த புலவர்களின் . சுய அநுபவங்களே பாடல்களாகப் பதிவாகியுள்ளன. பல்லக்கில் பவனிவந்த சில புலவர்கள் பற்றிய செய்திகளும் இல்லாமல் இல்லை.

**"அட்டாவதானமும் தொல்காப்பியமும் அகப்பொருளும்**
**தொட்டாதி தொட்டப் பிரபந்தமெல்லாம் நம்மைச்**
**- சொல்லச்சொல்லி**
**ஒட்டாரங்கட்டி நம்பல்லக்குக் கொம்பை யொடித்தெறிந்த**
**தட்டாரப் பையல் அரிகரபுத்திரனைச் சண்ணினனே"[10]**

(ஒட்டாரங்கட்டி - முரட்டுத்தனம் பண்ணி)
(சண்ணினேன் - வென்றுதாங்கினேன்)

சொக்கநாதப்புலவரின் மேற்படிப் பாடலினூடு அக்காலக்

கல்விமரபிலே தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், ஆரம்ப காலத்தில் இருந்துவந்த பிரபந்தங்கள் யாவும் கற்பிக்கப்பட்டன என்பதை அறியமுடிகின்றது. மாணாக்கர்கள் ஆசிரியர்களுக்குப் பல்வேறு உதவிகளையும் செய்து பாடங்கேட்பது நமது மரபுவழித் தமிழ்க்கல்வியின் நடைமுறையாகும். புறநானூற்றிலே உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" எனவரும் பாடலின் பொருளையும் இந்த இடத்திலே நினைத்துக்கொள்வது நல்லது. *(புறம் 183)*

இந்த இடத்திலே கம்பன் பற்றித் தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெறும் நிகழ்வொன்றினைச் சுட்டிக்காட்டுவது நலம் என்று கருதுகின்றேன். கம்பன் இராமாயணத்தினை இரவிரவாக எழுதும்போது, (கம்பன் சொல்லச் சொல்ல மாணாக்கர்களும் எழுதுவர்) வெளிச்சத்திற்காகப் பந்தங்களைப் பிடித்துக் கொண்டிருப்பார்களாம். பந்தம் பிடிப்பவர் களைத்துப்போவதும் உண்டு. அப்போது காளியை வந்து தமக்குப் பந்தம் பிடித்து உதவுமாறு கம்பன் கூறியதாக ஒரு பாடல் உள்ளது. கம்பனின் கவித்துவ ஆளுமை பற்றி அனைவரும் அறிவர். கம்பன் பாடியதாகத் தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெறும் பாடலை இங்கு சுட்டிக் காட்டுகின்றோம்.

**"ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே**
**வெற்றியூர்க் காகுந்தன் மெய்ச்சரிதை - பற்றியே**
**நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணாக்கர்**
**பிந்தாமற் பந்தம் பிடி"**[11]

தமிழ்மக்கள் மரபிலே வழங்கும் "பந்தம் பிடித்தல்" என்னும் மரபுச்சொற்றொடர் பற்றிய ஆய்வுக்குக் கம்பனின் இப்பாடல் துணைசெய்கின்றது எனலாம்.

புலவர்கள் வறுமையால் வாடியபோது அவர்களுக்கு உதவிய நிலக்கிழார்களை - குறுநில மன்னர்களைப் புகழ்ந்து பாடவும் அவர்கள் பின்நிற்கவில்லை. பொருள் கொடுத்தவர்களைப் புகழ்ந்தது போலவே பொருள் கொடாதவர்களை இழித்தும் பழித்தும் பாடியுள்ளனர். சமூக பொருளாதார மாற்றத்தினால் உருவான புதிய பணக்காரப் பரம்பரையையும் அவர்களின் உலோபித்தனத்தையும் வெளிப்படையாகவே கண்டித்துப் பாடியுள்ளனர். தனிப் பாடற்றிரட்டிலே இடம்பெறும் புலவர்களில் இராமச்சந்திரக்கவிராயர் என்பவர் மிகவும் முக்கியமானவர். சமூகத்தை விமர்சிப்பதிலும் சமயச் சார்பான புராணக் கதைகளை நகைச்சுவையாக நோக்குவதிலும், வறுமையைப் பாடுவதிலும் வல்லவர். இவரது "ஆவீன மழைபொழிய இல்லம் வீழ" என்ற பாடல் மிகவும் புகழ்பெற்றது. இப்பாடலின் இறுதி அடிகள் இரண்டும் அக்கால அரசியலையும் சமூகத்தையும் மறைமுகமாகக் கண்டிப்பனவாக அமைந்துள்ளன. "கோவேந்தர் உழுதுண்ட கூலிகேட்கக் குருக்களுமோ தட்சணைகள் கொடு என்றாரே" என அந்தப் பாடல் நிறைவுபெறும். நிலவுடைமையாளர்களின் கெடுபிடியும் குருக்கள்மாரின் குணவியல்பும் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டு உள்ளமையைக் காணமுடிகின்றது.

இராமச்சந்திரக்கவிராயரின் பாடல்கள் யாவும் தனிப் பாடற்றிரட்டைத் தவிர வேறு இடங்களில் பதிவாகியுள்ளதாகத்

தெரியவில்லை. நிலையான அரசு போய் சிறுசிறு குழுக்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய சூழ்நிலையிலே புதிய பணக்காரப் பரம்பரையொன்று உருவாகுவது இயல்பானதே. இதனை இராமச்சந்திரக்கவிராயர் சிறப்பாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

**"புல்லுக்கட்டும் விறகும் சுமந்தபேர்**
**பூர்வ காலத்துப் புண்ய வசத்தினால்**
**நெல்லுக்கட்டும் பணக்கட்டும் கண்டபின்**
**நீலக்கல்லிற் கடுக்கனும் போடுவார்**
**சொல்லுக்கட்டும் புலவரைக் கண்டக்கால்**
**துள்ளிப்பாய்ந்து கதவையடைத்தெதிர்**
**மல்லுக்கட்டும் மடையரைப் பாடவோ**
**மலையச் சாரலில் வாழ்பெரியம்மையே"**[12]

மலையச்சாரலில் வாழும் உமாதேவியைத் துதித்துச் சமூகத்தைச் சாடும் திறன் இரசிக்கத்தக்கது. சமூக யதார்த்த மொன்றைக் கூறும் இப்பாடலின் அடிநாதமாகத் திடீரெனச் சமூகத்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தைப் புலவர் அங்கீகரிக்கவில்லை என்பதும் பொதிந்து கிடக்கின்றது.

வறுமை காரணமாகப் புலவர்கள் சமூக மதிப்புக் குன்றி, இரந்து வாழும் சூழல் இக்காலப்பகுதியிலே பெரிதும் காணப்பட்டமையைப் பல பாடல்கள் புலப்படுத்துகின்றன. புலவர்கள் மதிக்கப்படாமையும் அவமதிக்கப்பட்டமையும் பெருவழக்காக இருந்தமையைத் தனிப்பாடல்களினூடு அறியமுடிகின்றது. பிற்காலப் புலவர்களில் சமயச் சார்புடன் சிற்றிலக்கியங்கள் பல செய்த சிவப்பிரகாச சுவாமிகள் பற்றித் தனிப்பாடற்றிரட்டிலே காணப்படும்

பாடலொன்று குறிப்பிடும் சம்பவம் அக்காலப் புலவர்களை மக்கள் எவ்வாறு மதித்தார்கள் என்பதற்குச் சான்றாகும். சுவாமிகள் ஒரு மாங்கனியை எடுத்தமைக்காகத் தன் மடியிலே பிடித்து இழுத்த தோட்டக்காரனுக்குச் சாபமிட்டுப் பாடிய பாடலினூடு அறியமுடிகின்றது.

> **"அடுத்துவருந் தொண்டனுக்கா வந்தகனைத்தாளால்**
> **அடர்த்ததுவும் சத்தியமேயானால் - எடுத்ததொரு**
> **மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி**
> **சாம் கனிக்காதித்தன்வரத் தாம்"** [13]

தோட்டக்காரனைத் திட்டிச் சாபமிடும் பாணியிலே பாடிய இப்பாடல் புலவரின் இயலாமையையும் காட்டிநிற்கிறது. இப்பாடலில் வரும் "சாம்கனிக்காதித்தன்வர்" என்பதன் பொருள் மிகவும் சுவையானது. கன்னிராசிக்குச் சூரியன் வரும் போது (அதாவது புரட்டாதி மாசத்திலே) இத்தோட்டக்காரன் சாவான் என்பதாகும். புலவர் சித்திரை மாசத்திலே மாங்கனியை எடுத்திருக்க வேண்டும். ஆறுமாசத்திற்குள் அவன் சாவான் எனச் சாபமிட்டுப் பாடியுள்ளார். புலவரின் கவித்துவத்தினூடு சோதிட அறிவையும் சமய நம்பிக்கையையும் இப்பாடலினூடு கண்டுகொள்ள முடிகின்றது.

நமது தமிழ்க்கல்வி மரபிலே இலக்கியம், இலக்கணம் என்பவற்றோடு தருக்கம், சமயதத்துவங்கள், வைத்தியம், சோதிடம் முதலியனவும் இணைந்திருந்தன என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.

பிற்காலக் கவிஞர்களிலே சீர்காழி அருணாசலக் கவிராயருக்குச் சிறப்பான முக்கியத்துவம் உண்டு. இராமநாடகக் கீர்த்தனை மூலம் இராமாயணக் கவிஞன் எனப் பாராட்டப்பட்ட இவர் திருவாசகத்தினை மொழிபெயர்த்த போப் என்ற ஆங்கிலேயருக்குத் தமிழ் ஆசிரியராகவும் மொழிபெயர்ப்புக்கு உதவியாளனாகவும் இருந்துள்ளார். போப் இவருக்கு வழங்கிய வேதனம் போதாமையினால் தமக்குப் பத்து ரூபா தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார் (ஐந்து ரூபாவே கொடுத்திருக்க வேண்டும்). அதற்குப் போப் மறுக்கவே பின்வரும் பாடலை அவருக்குக் கவிராயர் எழுதி அனுப்பினார்.

**"பத்துருபாயனை நேர் பாப்பையவேளே உனக்குப்**
**பத்துருபா யென்ன பஞ்சமோ - முத்துநகை**
**வீழிவாய்ப் பாலுண்ட வேந்தன்பிறந்தசீ**
**காழியரு ணாசலன்யான் காண்"**[14]

கவிராயரின் புலமைத்திறனும் பணிந்து போகாத புலமைச் செருக்கும் ஒருவகையிலான நையாண்டித் தன்மையும் இப்பாடலிலே தெளிவாகத் தெரிகிறது. "பத்துருபாயனை நேர் பாப்பையவேளே" என்பதற்கு "(பத்து + உரு + உபாயன்) பத்து அவதாரம் எடுத்த தந்திரக்காரனாகிய திருமாலைப் போன்ற போப்ஐரே" என்பது பொருளாகும். பொதுவாக மேலைப்புலத்தில் இருந்துவந்து இங்கு தமிழ் கற்றுத் தமிழ்ப் பணியாற்றிய அறிஞர்கள் பலர் தமக்கு உதவியாகச் சுதேச தமிழ் அறிஞர்களுக்கு வேதனம் கொடுத்து வைத்திருந்தமை யாவரும் அறிந்ததே. இந்தவகையிலேதான் அருணாசலக்கவிராயரும் G.U. போப்புடன் பணியாற்றியிருக்க

வேண்டும். வீரமாமுனிவர் முதல் பேர்சிவல் வரை இந்த மரபு தொடர்ந்தமையை ஆய்வாளர்கள் அறிவர். தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெறும் பெரும்பாலான புலவர்களுக்கு வறுமையும் அதனால்வரும் விரக்தியும் வேதனையுமே கவிப்பொருளாக அமைந்துள்ளன. தமிழ்நாட்டின் அரசியல், சமூகச் சூழ்நிலைகள் புலவர்களுக்கு உசிதமாக அமையவில்லை. அகன்ற நிலப்பரப்பையுடைய தமிழ்நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பரிசுபெற்று வாழும் பரிதாபநிலையே இக்காலப் புலவர்களுக்கு வாழ்வாக அமைந்திருந்தமையைப் பெரும்பாலான பாடல்கள் புலப்படுத்தி நிற்கின்றன. மதுரகவிராயர் எனும் புலவர் தமது வறுமைநிலையைப் பற்றிப் பாடிய பாடல் மிகவும் சுவை பயப்பதாகும்.

**“நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல**
**நாளைக் கிருப்பாயோ நல்குரவே - காளத்தி**
**நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே**
**இன்றைக்கே சற்றே இரு”**[15]

இப்பாடலைப் பற்றியதொரு கதையும் தனிப்பாடற் திரட்டிலே இடம்பெறுகின்றது. அக்கதையினூடும் அக்காலச் சமூகச் செல்நெறியைப் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆளும் வர்க்கத்திற்கும் நிலவுடமையாளர்களுக்கும் முரண்பாடு நிலவியது என்பதை இப்பாடலுக்கு விளக்கமாக அமையும் கதை புலப்படுத்துகின்றது.

தனிப்பாடற்றிரட்டுப் புலவர்கள் பொருள் வேண்டிப் புரவலர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசுபெற்ற போதிலும் சில


290274

இடங்களிலே ஏமாற்றப்பட்டமையையும் சொல்லிக் கழிவிரக்கப் படுகிறார்கள். கழிவிரக்கத்திற்குச் சான்றாகப் பல பாடல்கள் உளவேனும் வகைமாதிரிக்குப் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

**“கல்லாத ஒருவனைநான் கற்றாயென்றேன்**
**காடெறியுமவனை நாடாள்வாயென்றேன்**
**பொல்லாத ஒருவனைநான் நல்லாயென்றென்**
**போர்முகத்தை அறியானைப் புலியே என்றேன்**
**மல்லாரும் புயனென்றேன் சூம்பற்தோளை**
**வழுங்காத கையனைநான் வள்ளல் என்றேன்**
**இல்லாது சொல்லேனுக்கு இல்லை என்றான்**
**நானும் எந்தன்குற்றத்தால் ஏகின்றேன்”**[16]

புலவரின் துயரத்தை மாத்திரமன்றி அக்காலப் பாடல்களின் உட்பொருளையும் மேற்படிப் பாடல் புலப்படுத்தி நிற்கின்றது. புலவர்கள் பொய் சொல்லுவார்கள், தாம் சொன்ன சொற்களை மாற்றிப் பொருள் கூறுவார்கள், தமது தேவைக்காகப் புகழ்ந்து பாடுவார்கள் இத்தகைய பல கருத்துநிலையைப் புலவர்கள் கொண்டிருந்தார்கள் எனப் புரவலர் பாடிய பாடலும் தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெற்றுள்ளது. சான்றாகப் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

**“போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில்**
**தூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை**
**மாற்றினும் மாற்றுவர் வன்கணாளர்கள்**
**கூற்றினும் பாவலர் கொடியவராவரே”**[17]

புலவர்களைப் பற்றிய புரவலர்களின் மதிப்பீடாக இப்பாடலைக் கொள்ளலாம்.

பிற்காலத்திலே தமிழ்ப் புலவர்கள் என்றால் ஏழைகள் என்ற கருத்துநிலை வலுப்பெறுவதற்கு இவர்களின் வாழ்வியலும் இவர்கள் பாடிய பாடல்களும் ஒருவகையிலே காரணமாகலாம்.

தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களை நுனித்து நோக்கும் போது அக்காலச் சமூகத்திலே பரத்தமையும் அதனால் உண்டாகும் ஒழுக்கக் கேடுகளும் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது. தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களில் இடம்பெறும் புலவர்களில் பெரும்பாலானவர்கள் பரத்தமை பற்றிப் பரத்தையரைப் பற்றிப் பாடியுள்ளனர். பரத்தமை சமூக அங்கீகாரம் பெற்ற ஒன்றாக இக்காலப்பகுதியிலே இருந்திருக்க வேண்டும். சங்ககாலத்துப் பாடினிகளிற் தொடங்கிப் படிப்படியாக உருமாறிச் சோழர் காலத்திலே தேவரடியார்களாக (தேவடியாளாக) வாழ்ந்தவர்கள் பேரரசு சாய்ந்து சிற்றரசுகளும் வேற்றரசர்களும் ஆட்சியதிகாரத்திலே இருந்த காலத்தில் பரத்தையர்களாக (தாசிகள்) மாறியிருக்க வேண்டும் என ஊகிக்கலாம். பணம் கொடுத்து இன்பம் துய்ப்பதற்குச் சமூக அங்கீகாரம் இருந்திருக்கிறது போலத் தெரிகின்றது. மிகவும் சுவையான பாடல்கள் பரத்தையர்களைப் பற்றி இடம்பெற்றுள்ளன. "தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை" என்ற தொடர் தமிழ்ப்புலவர் சரிதையிலே மிக விரித்துப் பேசப்படுவது. சோழர்கால இந்த மரபு நாயக்க மன்னர்கள், குறுநில மன்னர்கள் ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து வந்தமைக்குத் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்கள் சான்றாகின்றன. பரத்தையரைப் பாடுபொருளாக்கிச் சிலேடைப்

பாடல்கள் பல பாடப்பட்டுள்ளன. பெரும்பாலான இப்பாடல்கள் விரசத்தன்மை பொருந்தியவை என்பதையும் குறிப்பிடவேண்டும்.

**"ஓட்டங் கடியதா லுள்ளவரை மேவுதலால்**
**சேட்டை எவரிடத்தும் செய்தலால் - நாட்டமுடன்**
**காத்திரத்திற் குட்டியுறக் கட்டுதலால் தெட்டுதால்**
**கூத்தியர்க்கு நேராங்குரங்கு"[18]**

எனக் கூத்தியரும் குரங்கும் ஒன்று என்று சிலேடையாகப் பாடப்பட்டுள்ளது.

இன்று தமிழ் வழக்கிலே பரத்தையைக் குறிக்கப் பயன்படுத்தும் பரிணாமச் சொற்களில் "கூத்தி" என்பதும் ஒன்றாகும். பண்டைக்காலத்திலே ஆடல்பாடல்களில் வல்லவர்களாகப் பரத்தையர் இருந்தமையாற் பிற்காலத்திலும் அதன் வெளிப்பாடாகக் கூத்தி என்ற சொல் வழங்கி வந்திருக்கிறது. கூத்தி என்றால் இழிவாக நோக்கும் சமூகம் கூத்திக்கு ஆண்பாலான கூத்தனை இழிவாகக் கருதுவதில்லை. சிவனையே கூத்தன் (தில்லைக்கூத்தன்) என்று அழைப்பவர்கள் உமாதேவியைக் கூத்தி என்று அழைப்பதில்லை. பெண்ணிய ஆய்வாளர்கள் இச்சொற்பொருள் விளக்கத்தினைப் பெண்ணிய நோக்கிலே ஆராயலாம்.

அகன்ற நிலப்பரப்பினைக் கொண்ட தமிழ்நாட்டிலே ஊரூராகச் செல்லும் புலவர்கள் தாங்கள் தங்குகின்ற கிராமத்திலே வாழுகின்ற பரத்தையரிடம் சென்று உறவாடி மகிழ்ந்து வந்தமைக்கான சான்றுகள் பல இத்தொகுப்புக்களிலே காணப்படுகின்றன. பெண்களின் (பரத்தையரின்) அங்கங்களை

வருணித்துப் பாடியுள்ளனர். அதிலும் பாலுணர்வைத் தூண்டும் அவயவங்களையே பெரிதும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். தம்மிடம் சேரும் பொருளப் பரத்தையர்களுக்கு வழங்கியமையாலும் இவர்களுக்கு வறுமை உண்டாகியிருக்கலாம் எனக் கருதமுடிகின்றது. இக்காலப் புலவர்களிற் பலர் பரத்தையர்களிடம் சென்ற தமது நேரடி அநுபவத்தைப் பலவிடங்களிலும் சுவைபடச் சொல்லியிருக்கின்றனர். கூளப்பநாயக்கன் காதல், விறலிவிடுதூது முதலான விரகம் சார் நூல்களை எழுதிய சுப்பிரதீபக்கவிராயர் தாம் பரத்தையிடம் சென்ற அநுபவத்தையும் அவளை மறக்க முடியாமல் திண்டாடுவதையும் பின்வருமாறு பாடியுள்ளார்.

**"படைத்தமதன் தனையெரித்த பழமலையார்**
**நன்னாட்டில் பாவையாள் தன்**
**கடையரிக் கண்ணால் மருட்டி மயல் ஊட்டி**
**வரவழைத்துக் கைக்குள் ஆக்கி**
**இடைதுவள முலைகுலுங்க எனையணைத்த**
**சுகத்தை நினைந்து ஏங்கி ஏங்கி**
**அடைமழையு முளைவழியும் பொதியெருதும்**
**ஒருவனும் போல் அலைகின்றேனே"**[19]

புலவர்கள் மாத்திரமன்றிப் புரவலர்களான நிலக்கிழார்களும் நாயக்க மன்னர்களும் கூடப் பரத்தமை ஒழுக்கத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கு இக்காலத்தெழுந்த சதக இலக்கியங்கள் சான்றாக அமைகின்றன. தமிழ்நாட்டின் அரசியல் நிலைமையாலும் பொருளாதாரச் சூழ்நிலையாலும் பண்பாட்டுப் பாரம்பரியத்திலே ஏற்பட்ட சரிவுநிலையைத் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களினூடு தெளிவாகக் காண முடிகின்றது.

பரத்தையரையும் அவரது இயல்புகளையும் அதிகம் பாடிய புலவராகக் காளமேகப்புலவர் காணப்படுகின்றார். பரத்தையரைத் தேவடியாள், வேசை, தாசி முதலான சொற்களால் இக்காலப் புலவர்கள் அழைக்கின்றனர். காளமேகப்புலவர் திம்மி என்கின்ற தெலுக்குத் தேவடியாளிடம் சென்று பட்ட அநுபவத்தை நகைததும்பப் பின்வருமாறு பாடியுள்ளார்.

**"ஏமிரா ஓரி என்பாள் எந்துண்டி வஸ்தி என்பாள்**
**தாமிராச் சொன்னதெல்லாம் தலைகடை தெரிந்ததில்லை**
**போமிராச் சூழுஞ்சோலை பொருகொண்டைத் திம்மிகையில்**
**நாமிராப" பட்டபாடு நமன்கையிற் பாடுதானே"[20]**

திம்மி என்னும் தெலுங்குத் தேவடியாள் - (ஏமிரா ஓரி என்பாள் - என்னடா அடே என்பாள். எந்துண்டி வஸ்த்தி என்பாள் - எவ்விடத்தில் இருந்து வருகிறாய் என்பாள்)

மற்றைய சொற்பொருள் வெளிப்படை. தெலுங்கு, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து தமிழ்நாட்டுப் பெருநிலப்பரப்பினுள் பரத்தையர்களும் வந்து குடியேறியுள்ளனர் எனக் கருதமுடிகின்றது. பரத்தையர்கள் ஆடல் பாடல்களில் வல்லவர்கள் என்பது சங்ககாலத்தில் இருந்தே அறிந்துவந்த செய்தியாகும். நாயக்கர் காலத்துப் பரத்தையர்களும் ஆடல் பாடல் வல்லவர்களாகவே விளங்கியிருப்பர் என ஊகிக்கலாம். பரத்தையரைப் பாராட்டிப் பாடியவர்களே அவர்களை இழித்தும் பாடியுள்ளனர். இத்தகைய பாடல்கள் பலவற்றைத் தனிப் பாடற்றிரட்டிலே காணமுடிகின்றது. காளமேகப் புலவரே இந்த வகையிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகின்றார்.

"வாழ்த்த திருநகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள் - நேற்றுக்
கழுதை கெட்ட வண்ணான் கண்டேன் கண்டேனென்று
பழுதை எடுத் தோடிவந்தான் பார்"[21]

மேற்காட்டிய பாடலைப் போலவே காளமேகப்புலவரின் இன்னொரு பாடலும் அமைகின்றது.

"இந்துமுடிக்கும் சடையாளர் இருக்கும் தொண்டை
- வளநாட்டில்
சிந்துபடிக்கக் கவிபடிக்கத் தெரியா மடவாயுன்றனுக்குக்
கெந்தப் பொடியேன் பூமுடியேன் கிழமாய் நரைத்து
- முகந்திரைந்தும்
இந்தமுறுக்கேன் வீறாப்பேன் எடுப்பேன் உன்னைக்
- கெடுப்பேனே"[22]

பரத்தையருக்கும் புலவர்களுக்கும் இடையிலே இருந்த தொடர்புகளைப் புலப்படுத்தும் பாடல்கள் பலவுள. கம்பன் முதல் காளமேகம் வரை பரத்தையர்களோடு தொடர்பு கொண்டிருந் தமையைத் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களினூடு காணமுடிகின்றது. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த இலக்கியங்களிலும் பரத்தைகள் பற்றிய செய்திகள் நிறையவே இருப்பதை அவதானிக்கலாம்.

தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களினூடு அக்காலப் பெண்களின் நிலையையும் கண்டுகொள்ள முடிகின்றது. பரத்தமையைக் கண்டித்தமையிலும் பார்க்கப் பெண்களை இழித்தும் பழித்தும் பாடிய பல பாடல்கள் உள்ளன. பெண் அடிமைத்தனம் பெரிதும்

பேணப்பட்டமையைப் பாடல்களினூடு கண்டுகொள்ள முடிகின்றது. சங்ககாலத்தில் வாழ்ந்த ஔவைக்கும் பிற்கால ஔவைகளுக்கும் வேறுபாடு தெரியாது தொகுப்பாளர்கள் பாடல்களைத் தொகுத்துள்ளனர். முற்கால ஔவை, இடைக்கால ஔவை, பிற்கால ஔவையார் எனப் பலர் வாழ்ந்தமையை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஔவை, ஔவையார், ஔவைப்பாட்டி என வழங்குவதினூடும் இந்த வேறுபாடு தெரியவருகின்றது. தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெறும் பாடல்களைப் பிற்கால ஔவையாரே பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பெண்பாற்புலவரே பெண்களைக் கண்டித்துப் பாடியமைக்கு என்ன காரணம் என்று அறியமுடியவில்லை. சாதாரண பேச்சுவழக்கிலே "பெண்களுக்குப் பெண்கள்தான் எதிரி" என்று கூறுவதையும் இவ்விடத்திலே பொருத்திப் பார்க்கலாம் போலத் தெரிகிறது.

தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெறும் ஆண்பாற்புலவர்களிற் பலர் பரத்தையரை இழித்துப் பாடியுள்ளார்களேயன்றிப் பொதுவாகப் பெண்களை இழித்துப் பாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் பெண்கள்மேல் வைத்த ஆசையினால் பலர் அழிந்தார்கள் என்று பாடியுள்ளனர். உதாரணமாகப் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

> **"வாலி மடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்**
> **கோல முடிமன்னர் குறைந்ததுவும் - சால**
> **மதியுடைய நூற்றொருவர் மாண்டதுவும் ஐயோ**
> **சதவிகரத்தால் வந்த தாழ்வு"**[33]
>
> (சதவிகரம் - பெண்கள் பற்றிய விவகாரத்தால்)

பெண் குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டும், கணவனுக்கு அடங்கி நடக்கவேண்டும், விருந்தினர்களை உபசரிக்க வேண்டும், குழந்தைகளைச் செவ்வையாகப் பராமரிக்க வேண்டும், கணவனை எதிர்த்துப் பேசக்கூடாது ("எதிரிற் பேசும் மனையாளிற் பேய்நன்று") என்ற இவ்வாறான கருத்து நிலைகளே அக்காலச் சமூகத்தில் நிலவியது என்பதைத் தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெறும் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

**"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்**
**எத்தாலுங் கூடி இருக்கலாம் - சற்றேனும்**
**ஏறுமாறாக இருப்பாளே யாமாயிற்**
**கூறாமற் சன்யாசங் கொள்"**

**"சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப் போல்வடிவு**
**கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே - தொண்டா**
**செருப்படிதான் செல்லா உன் செல்வமென்ன செல்வம்**
**நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்"[24]**

மனைவி சரியாக நடக்காவிட்டால் கணவன் துறவை மேற்கொள்ளும் படியும் அல்லது இறக்கும் படியும் புத்திமதி கூறப்பட்டுள்ளது. உண்மையில் கணவனை வேறு திருமணம் செய் என்று கூறாமல் விட்டுள்ளமை கூர்ந்து அவதானிக்கத்தக்கது. பெண்களிடம் சில பொதுத்தன்மைகள் இருக்கும் என்று புலவர் கருதியதனாற்போலும் மறுமணம் செய்துகொள் என்று பரிந்துரை செய்யவில்லை என ஊகிக்கலாம்.

பெண்கள் குடும்பச்சூழலில் இயங்கியமை பற்றியே தனிப்பாடற்றிரட்டுப் பாடல்கள் கூறுகின்றன. குடும்பத்திற்கு வெளியே வந்து அவர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளைப் பெறமுடியவில்லை. மனைவியின் வறுமை நிலையை மனைவி படும் துன்ப துயரங்களைப் புலவர்கள் ஆங்காங்கே பாடியுள்ளனர். குடும்ப வாழ்க்கையில் மனைவி மேலாதிக்கம் செலுத்தியதும் உண்டு என்பதையும் இத்தொகுப்பில் இடம்பெறும் பாடல்களினூடு காணமுடிகின்றது. சான்றாகப் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

**“இருந்து முகம் திருத்தி ஈரோடு பேன்வாங்கி**
**விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக**
**ஆடினாள் பாடினாள் ஆடிப்பழமுறத்தால்**
**சாடினாள் ஓடஓடத்தான்”[35]**

தனிப்பாடற்றிரட்டிலே பல்வேறு காலத்துப் பாடல்களும் இடம்பெற்றிருப்பது பற்றி ஏலவே குறிப்பிட்டோம். இதனாலே ஔவையார் பாடல்களிற் குழப்பநிலை ஒன்றும் காணப்படுகின்றது. அக்காலச் சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்த தென்பதைத் தெளிவாகப், பூரணமாக அறியத் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்கள் பெருமளவுக்கு உதவவில்லை ஆனால், அக்காலச் சிற்றிலக்கியங்களிலே பெண்களின் நிலை விரிவாகப் பேசப்பட் டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களிற் பெரும்பாலான பாடல்கள் சிலேடை, நையாண்டி, பழித்தல் முதலானவையாகக் காணப்படுகின்றன. நிந்தாஸ்த்துதியையும் இதனுடனேயே சேர்த்து நோக்கவேண்டும். இவை ஒன்றுடன் ஒன்று ஏதோவொரு வகையிலே தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன.

தாம் இலக்கிய இலக்கணங்களில் வல்லவர்கள், பாட்டுக்கட்டும் திறனுடையவர்கள், அறிவாளிகள் என்பதைப் புலப்படுத்தவே சிலேடை முதலான கவிகளைப் பாடியிருக்கிறார்கள் என்றும் கருதலாம். ஒருவகையிலே நகைச்சுவையும் இப் பாடல்களிலே விரவி வருவதை அவதானிக்கலாம். தனிப் பாடற்றிரட்டிலே இடம்பெறும் புலவர்களிற் பலர் சிலேடைகளைப் பாடியுள்ளனர். இவர்களுள் அதிகமான சிலேடைகளைக் காளமேகப்புலவரே பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. காளமேகப்புலவரைச் "சிலேடைக்கவி" எனவும் அழைத்துள்ளனர். அக்காலத்தில் பெரும் புலமையாளர்கள் என்றால் சிலேடையாகப் பாடவும் பேசவும் தெரிந்திருக்க வேண்டுமென்று சமுதாயம் எதிர்பார்த்தது போலும். காளமேகப்புலவர் மாத்திரம் (23) இருபத்திமூன்று சிலேடை பாடல்களைப் பாடியுள்ளார். இவரது பெரும்பாலான சிலேடைப் பாடல்களைத் தமிழ் மாணவர் நன்கு அறிவர். வகைமாதிரிக்கு ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டலாம்.

**"அடிநந்தி சேர்தலால் ஆகம் வெளுத்துக்**
**கொடியுமொரு பக்கத்திற் கொண்டு - வடிவுடைய**
**மாசுணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனால்**
**பூசுணிக்காய் ஈசனெனப் போற்று"[26]**

பூசிணிக்காய்க்கும் சிவபெருமானுக்கும் சிலேடையாக அமைந்துள்ளது இப்பாடல்.

**இதன் பொருள் :** <u>பூசுணிக்காய்</u> - பூசுணிக்காயானது, அடிநந்தி சேர்தலால் - அடியிலே காம்பு உடையது, ஆகம் வெளுத்து -

மேற்பாகம் முற்றிலும் வெண்மை நிறமுடையதாய், கொடியுமொரு பக்கத்திற் கொண்டு - ஒரு பக்கத்திற் கொடி படரப் பெற்று, வடிவுடைய மாசுணத்தைப் பூண்டு - காயைக் கெடாது பேணும் பளபளப்பான சாம்பல் பூசப்பட்டு, வளைத்தழும்பு பெற்றதனால் - தான் கிடக்கும் பொந்தின் அடையாளத்தைப் பெற்றுள்ளது.

**பரமசிவன்** - சிவபெருமான், அடிநந்தி சேர்தலால் - திருவடியைக் காளை வாகனத்தில் வைத்திருப்பவர், ஆகம் வெளுத்து - பூசிய திருநீற்றினால் திருமேனியை வெளுக்கப்பெற்று, கொடியுமொரு பக்கத்திற் கொண்டு - கொடிபோன்றவளாகிய உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவராய், வடிவுடைய மாசுணத்தைப் பூண்டு - பருத்த பாம்பை அணியாக அணிந்து, வளைத்தழும்பு பெற்றதனால் - உமையம்மையின் வளையல் தழும்பு திருமேனியிற் பதியப் பெற்றவர். ஆனால் பூசுணிக்காய் சிவபெருமானைப் போலவே தோன்று.

இவ்வாறே எல்லாச் சிலேடைப் பாடல்களும் அமைந்துள்ளன. சிலேடைப்பாடல்கள் சொல்லாய்வாளருக்குப் பெரிதும் பயன்படும். மனதுக்குத் தற்காலிகமாக மகிழ்வளிப்பவையாகவே பெரும்பாலான சிலேடைப்பாடல்கள் காணப்படுகின்றன. கவித்துவ ஆளுமை மிக்க இச்சிலேடைக் கவிஞர்களுக்குப் பொருளாதார வசதியும் அரச ஆதரவும் கிடைத்திருந்தால் பாரிய இலக்கியங்களை இவர்கள் செய்திருப்பார்கள் என்று கருதமுடிகின்றது. திருமலைநாயக்கரை முன்னிலைப்படுத்தியே பல சிலேடைப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பொதுவாக நாயக்கர் காலத்துக்குரிய கவிதைப் பண்புகள் சோழர் காலத்திலே ஊற்றெடுத்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை

பரவிப் பாய்ந்தமையையும் அவதானிக்க முடிகின்றது.

தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெறும் நிந்தாஸ்துதிப் பாடல்களுக்கும் சிலேடைப் பாடல்களுக்கும் ஒரோவழி உறவுண்டு என்பதையும் மனங்கொள்ள வேண்டும். நிந்தாஸ்த்துதி என்ற வடிவம் பிற்காலத்திலேயே பிரபல்யம் பெற்றுள்ளது. நிந்தாஸ்த்துதியை ஒருவகையிலே சமய சமூக விமர்சனமாகவும் கொள்ளலாம்.

இறைவனின் பல்வேறு கோலங்களையும், அற்புதங் களையும், அருட்சிறப்பையும் அநுபவபூர்வமாக, பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட பதிகங்களும் பாசுரங்களும் பாடிய தமிழ்நாட்டிலே நிந்தாஸ்த்துதி என்ற வடிவம் பெரிதும் இடம்பெற்றமைக்குச் சமூக பொருளாதார அரசியற் பின்னணிகள் பலமான காரணமாகலாம். அத்துடன் புலவர்களுக்கு இருந்த விரக்தியும் வேதனையும் இறைவனை நிந்திக்க வேண்டும் என்ற மனநிலையை உருவாக்கியிருக்கலாம். சமயச்சார்புடைய ஆளும் வர்க்கத்தின் கோபத்திலிருந்து தப்பிக்கொள்ள நிந்தாஸ்த்துதியைப் பாடியிருக்கலாம். பொரும்பாலான நிந்தாஸ்த்துதிப் பாடல்கள் துதிப்பதைவிட நிந்திப்பதையே முதன்மைப்படுத்தியுள்ளன என்பதையும் அவதானிக்க முடிகின்றது. தனிப்பாடற்றிரட்டுப் புலவர்களின் "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும்" பண்புக்கு நிந்தாஸ்த்துதிப் பாடல்களைச் சான்றாகச் சுட்டிக்காட்டலாம். சமயச்சார்பான புராண இதிகாசக் கதைகளை விமர்சிப்பதாக அல்லது நையாண்டி செய்வதாக நிந்தாஸ்த்துதிப் பாடல்கள் காணப்படுகின்றன.

பிள்ளையார் எலிவாகனத்தில் எழுந்தருளி வீதியுலா வரும்போது "வலிமிகுந்த மும்மதத்து வாரணத்தை ஐயோ எலியிழுத்துப் போகின்றதென்" எனப் பாடும்பொழுது பக்தியைவிட நிந்தையே விஞ்சிக் காணப்படுகின்றது. பிள்ளையார், முருகன், சிவன், திருமால், உமாதேவி முதலான இந்துக் கடவுள்களை நிந்தாஸ்துதியாகப் பாடிய பாடல்கள் ஒருவகையிலே சமயத்தைப் பழிப்பதாகவும் அமைந்துவிடுகின்றன. புராணக்கதைகளை முழுமையாக அறிந்தாற்றான் நிந்தாஸ்துதிப் பாடல்களின் உட்பொருளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

**"அப்பன் இரந்துண்ணி யாத்தாள் மலைநீலி**
**ஒப்பரிய மாமன் உறிதிருடி - சப்பைக்கால்**
**அண்ணன் பெருவயிறன் ஆறுமுத்தானுக்கிங்கு**
**எண்ணும் பெருமை இவை"[27]**

ஆறுமுகப்பெருமானை அற்புதமாகப் புகழ்ந்துபாடிய பாடல்கள் தோன்றிய (கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ்) காலப்பகுதிக்குப் பின்முன்னாகவே காளமேகப் புலவரின் காலத்தையும் கணக்கிடவேண்டி உள்ளது. கந்தபுராணம் தோன்றிய தமிழ்நாட்டிலே முருகன்மீது பாடிய நிந்தாஸ்த்துதி மிகவும் அவதானிப்புக்கு உரியதாகின்றது. புலவர்களின் சமயச்சார்பு வெளிப்படுவதைக் காட்டிலும் சமூகத்தைத் கண்டிக்க வேண்டுமென்ற கருத்துநிலையே இப்பாடல்களில் மேலோங்கிக் காணப்படுகின்றது எனலாம்.

முழுமுதற்கடவுள் என்று சைவசமயம் போற்றித் துதிக்கும் சிவனைப் பலர் நிந்தாஸ்த்துதியாகப் பாடியிருக்கின்றனர். சிவன்மீது பல நிந்தாஸ்த்துதிப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அவையும் புராண இதிகாசக் கதைகளையும் திருவிளையாடல்களையும் நையாண்டி செய்யும் வகையிலே அமைந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

**"கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனார்**
**பெண்டீர் தமைச்சுமந்த பித்தனார் - எண்டிசைக்கும்**
**மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார்**
**அக்காளை ஏறினராம்"** [19]

இவ்வாறே சிவபெருமானின் தில்லைக்கூத்தினைப் பின்வருமாறு நிந்தாஸ்த்துதியாகப் பாடுகிறார்.

**"ஆடாரோ பின்னையவர் அன்பரெல்லாம் பார்த்திருக்க**
**நீடாரூர் வீதியிலே நின்றுதான் - தோடாரும்**
**மெய்க்கே பரிமளங்கள் வீசும் தியாகேசர்**
**கைக்கே பணமிருந்தக் கால்"** [20]

பழிப்பது போலப் புகழ்வது எனக் கூறப்படும் நிந்தாஸ்த்துதிப் பாடல்களிலே சிலேடைத் தொடர்கள் தாராளமாக இடம்பெற்றிருக்கும். முற்சுட்டிய இரண்டு பாடல்களிலும் பல சொற்கள் சிலேடையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பாடலிலே "பெண்சுமந்த பாகத்தன் பெம்மான்" என மணிவாசகர் சிறப்பித்துப் பாடியதைப் "பெண்டீர் தமைச்சுமந்த பித்தன்" என "மனைவியைச் சுமக்கும் பித்தன்" என

நையாண்டியாகப் பாடுவதையும், தம் + கைக்கு - தங்கைக்கு எனவும் அக்காளை - அந்தக் + காளை (எருதுவாகனம்) எனவும் பாடுவதை அவதானிக்க முடிகின்றது.

அடுத்த பாடல் சிவபெருமானின் தில்லை நடனத்தைப் பழிப்பதுபோலப் புகழ்ந்து பாடும் நிந்தாஸ்த்துதிப் பாடலாகும். "மெய்க்கே பரிமளங்கள் வீசும் தியாகேசர்" என்பது வாசனைப் பொருட்களில் அபிஷேகம் செய்வதனைக் குறித்துநிற்கின்றது. "கைக்கே பணமிருந்தக்கால்" என்பது சிதம்பரநடராசர் வசதியுள்ளவர் என்ற பொருளும் - பணம் என்றால் பாம்பு - பாம்பைக் கரத்திலே அணிந்தவர் என்ற பொருளும் இருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

உண்மையிலே இந்த நிந்தாஸ்த்துதிப் பாடல்கள் சமய விமர்சனப் பாடல்களே எனலாம். இக்காலத்தில் உண்மையான சம்பவங்களைச் சிறுகதையாகவோ நாவலாகவோ எழுதிவிட்டு "யாவும் கற்பனை" என்று சொல்வதுபோலச் சமயத்தையும் கடவுளர்களையும் கண்டித்துவிட்டு "நிந்தாஸ்த்துதி" என்று கூறினார்களோ என எண்ணத் தோன்றுகின்றது.

தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களிலே மிகுந்து காணப்படும் மற்றொரு விடயம் நையாண்டியும் நகைச்சுவையும் ஆகும். நையாண்டி எல்லாம் நகைச்சுவையாவது இல்லை. நகைச்சுவை எல்லாம் நையாண்டியாவதும் இல்லை. ஆனால் சிலவேளைகளில் இரண்டுக்குமிடையே தொடர்பு ஏற்படுவதும் உண்டு. தனிப்பாட ற்றிரட்டுப் பாடல்களிலே இந்த இரண்டு தன்மைகளையும் காணமுடிகின்றது. நையாண்டி செய்வதற்கும் நகைச்சுவையாகப்

பேசுவதற்கும் ஒரு தனித்திறமை வேண்டும் என்று சொல்லுவார்கள். நையாண்டிக்கும் நகைச்சுவைக்கும் சான்றாகப் பல பாடல்களைச் சுட்டிக்காட்டலாம். வகைமாதிரிக்குச் சிலவற்றைச் சுட்டிக்காட்டுவோம்.

நையாண்டியும் நகைச்சுவையும் நிரம்பிய பாடல்களைப் பாடியவர்கள் வரிசையிலே காளமேகப்புலவருக்கு அடுத்த நிலையிலே இரட்டையர்களை வைத்து நோக்கலாம். பெரும்பாலான புலவர்களின் பாடல்களிலே நையாண்டியும் நகைச்சுவையும் கலந்து காணப்படுவது சமூகத்தில் அவர்களின் இருப்புக்கு ஏற்பட்ட சவால்களின் வெளிப்பாடாகலாம். விரக்தியாலும் வேதனையாலும் நையாண்டி, இழிவரல் தோன்றுவதும் உண்டு. இரட்டைப்புலவர் பாண்டியனிடம் சென்று பரிசுபெறும் போது அதனைத் தடுத்த அமைச்சரை நையாண்டி செய்து இரட்டையர் பாடிய பாடல் இனிமையானது. பாண்டியன் அவையில் இருந்த தமிழ்ப்புலவர்களை நோக்கி,

**"புராதனமான தமிழ்ப்புலவீர் இந்தப்புன்குரங்கு**
**மராமரம் விட்டிங்கு வந்ததென்னோ வகைகேட்டிலையோ**
**தராதலம் வென்ற தமிழ்மாறனையும் தன் தம்பியையும்**
**இராகவனென்றும் இலக்குவனென்றும் இருந்ததுவே"[30]**

இவ்வாறு பாடியுள்ளார்.

பாண்டியனையும் தம்பியையும் இராமனுக்கு, இலக்கு வனுக்கு உவமித்தமையால் அரசனும் கோபமடைந் திருக்கமாட்டான் என்று ஊகிக்கலாம். அமைச்சரைக் குரங்கு என்று கூறப் புலவர் இராமாயணக் கதையைப் பயன்படுத்தியமை சிறப்பாகவே உள்ளது.

தனிப்பாடற்றிரட்டுப் புலவர்களில் ஒருவருக்கு நையாண்டிப் புலவர் என்றே பெயர். நையாண்டியாகப் பாடப் பேச வல்லவராக இவர் இருந்திருக்க வேண்டும். இதனால் இவரை நையாண்டிப் புலவர் என மக்கள் அழைத்திருக்கலாம். இயற்பெயர் மறைந்து இப்பெயரே அவருக்கு நிலைத்திருக்கலாம். பவிசு, படோடபம் முதலியவற்றை அக்காலச் சமூகம் எவ்வாறு மதித்தது என்பதை நையாண்டிப் புலவர் பின்வருமாறு பாடுகிறார்:

**"மேலாடை இன்றிச் சபைபுகுந்தால் இந்த மேதினியார்**
**நூலாயிரம் படித்தாலும் எண்ணார் நுவல்பாற்கடலோ**
**மாலானவர் அணிபொன்னாடைகண்டு மகளைத்தந்தே**
**ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே"[31]**

ஆனால் இவரின் பெயரால் இடம்பெறும் பாடல்களில் பெரும்பாலும் நையாண்டியைக் காணமுடியவில்லை. காளமேகப்புலவரின் பெரும்பாலான பாடல்கள் நையாண்டித்தன்மை கொண்டவை. பலவற்றைச் சுட்டிக்காட்டலாம். விரிவஞ்சி ஒன்றைமட்டும் சுட்டிக்காட்டுகிறோம்.

**வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு**
**காலெங்கே யுட்குழிந்த கண்ணெங்கே - சாலப்**
**புவிராயர் போற்றும் புலவர்கா ளீவிர்**
**கவிராயர் என்றிருந்தக் கால்"[32]**

திருமலைராயன் ஆஸ்தான வித்துவான்கள் காளமேகப் புலவருக்கு நாங்கள் கவிராயர்கள் என்று கூறியபோது கவி + ராயர் என்றால் குரங்குத் தலைவர் என்றும் பொருள் உளது. நீங்கள்

குரங்குகளானால் உங்களது வாலெங்கே எனத் தொடங்கி அவர்களை நையாண்டி செய்ததே மேற்காட்டிய பாடலாகும். இன்றைய மொழியிலே கூறுவதானால் இப்பாடலை "நக்கல்" பாடல் எனக் கூறலாம்.

தமது துன்பதுயரங்களை வறுமை நிலையை நகைச்சுவை மூலம் வெளிப்படுத்தும் தன்மையும் இக்காலப் புலவர்களிடம் காணப்படுகின்றது. ஒரு சிறிய விடயத்தைப் பெருப்பித்து நகைச்சுவையாகக் கூறுவதற்குப் பின்வரும் பாடலை உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம்.

**"விறகு தறிக்கக் கறி நறுக்க வெண்சோற்றுப்புக்கு அடகு**
**- வைக்கப்**
**பிறகு பிளவு கிடைத்தென்றால் நாலாறாகப் பிளந்துகொள்ளப்**
**பறகு பறகு எனச் சொறியப் பதமாய் இருந்த பாக்குவெட்டி**
**இறகு முளைத்துப் போவதுண்டோ எடுத்தீராயிற்**
**- கொடுப்பீரே"**[33]

290274

ஒரு பாக்குவெட்டி ஏழைப்புலவன் ஒருவன் வீட்டிலே எத்தனை விடயங்களுக்குப் பயன்படுகின்றது என்பதை இப்பாடல் விளக்கி நிற்கின்றது. பாக்குவெட்டியின் பிரதான தொழில் பாக்கு வெட்டுவது. எப்போதாவது பாக்குக் கிடைத்தால் (பிறகு பிளவு கிடைத்தென்றால்) அதனை வெட்டிக்கொள்வதற்கு என்று புலவர் கூறுவது தமது துயரத்தை நகைச்சுவையூடாகப் புலப்படுத்தவுதாக அமைகின்றது.

நாம் ஏலவே குறிப்பிட்டது போலத் தமது துன்பங்களை நகைச்சுவையூடாகப் புலப்படுத்தியமைக்குச் சான்றாக இன்னொரு பாடலைச் சுட்டிக்காட்டலாம். ஒருவர் தமது துன்பத்தினைச் சொல்லி ஆறுகின்ற இடமாகப், பரிகாரம் தேடுகின்ற இடமாக ஆலயத்தைக் கொள்ளலாம். தமக்கு ஏற்பட்ட பல்வேறு துன்பங்களையும் சிவனிடம் சொல்லச்சென்ற புலவருக்குச் சிவன் தான்பட்ட துன்பங்களைக் கூறுவதாக அமையும் பாடல் நகைச்சுவை பொருந்தியதாகும்.

**"வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற்புண்ணும்**
**வாசல் தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்**
**செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்**
**தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேனப்பா**
**கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்**
**கொடுங்காலால் உதைத்த புண்ணும் கோபமாகப்**
**பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த புண்ணும்**
**பாரென்று காட்டிநின்றான் பரமன்தானே"**[34]

இந்தப் பாடலின் நகைச்சுவை ஒருபுறம் இருக்க, இதனுள்ளே புலவரின் துயரமும் இறைவனாற்கூடத் தமது துயரத்தை நீக்கமுடியவில்லை என்ற விரக்தி உணர்வும் வெளிப்படுவதைக் காணலாம். இக்காலப் புலவர்களை அரசர்கள், புரவலர்கள் ஆதரிக்கவில்லை என்ற உட்பொருளும் இப்பாடலிலே உண்டு. அத்துடன் சமய புராணக் கதைகளைச் சமூகத்துடன் இணைத்துக் காணும் பண்பும் இக்காலப் புலவர்களிடம் இருந்திருக்கிறது என்பதற்கும் இப்பாடலைச் சான்றாகக் கொள்ளலாம்.

இக்காலப் புலவர்கள் சொற்களை வைத்துத் தமது திறமையைக் காட்டியுள்ளனர் என்பதைச் சிலேடை பற்றிக் குறிப்பிட்ட இடத்திலே சுட்டிக்காட்டினோம். "சொற்கள் யாவும் பொருள் குறித்தனவே" என்பது எமது இலக்கணமரபு. சொற்களைப் பிரித்துப் பொருள்கூறும் பொழுதும் நகைச்சுவை தோன்றுவதுண்டு. சொற்படுவிற்பனமாகப் பாடப்பட்ட நகைச்சுவைப் பாடலொன்றைச் சுட்டிக்காட்டலாம்.

**"செற்றலரை வென்ற திருமலைராயன் கரத்தில்**
**வெற்றிபுரியும் வாளே வீரவாள் - மற்றையவாள்**
**போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்**
**ஆவாள் இவள் அவளாம்"**[35]

வாள் என்ற சொல் பல்வேறு வகையிலே பொருள்படுவதை நகைச்சுவையாக எடுத்துக்கொண்டாலும், புலவர் திருமலை ராயனைப் புகழ்ந்துபாடுவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறார் என்பதும் புலனாகின்றது.

தனிப்பாடற்றிரட்டிலே இடம்பெறும் சில பாடல்கள் புறநானூறு, நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம் முதலான நூல்களிலேயும் இடம்பெற்றுள்ளன. வாய்மொழி மரபு பற்றி இந்த உரையின் ஆரம்பத்திலே குறிப்பிட்டோம். அந்த மரபு இதன் தொகுப்பு முறையிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களைத் தொகுத்து நோக்கும் பொழுது, புலவர்களின் வறுமை, விரக்தி உணர்வு, சமுதாயத்திலே வெறுப்பு, கல்விநிலை, ஆளும் வர்க்கத்தின் சீர்கேடுகள் முதலான

பல்வேறு அமிசங்களே பெருமளவு பொதிந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இப்பாடல்களினூடு அக்காலச் சமய, சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகள் நேரடியாக இல்லாவிட்டாலும் உட்கிடையாக அமைந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

**நிறைவாக :**

தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களின் தொகுப்பு முறையில் உள்ள குறைபாடுகள், மூலபாடத்திறனாய்வும் தனிப்பாடற்றிரட்டுப் பாடல்களும், கவிதைஇயல் நோக்கில் தனிப்பாடற்றிரட்டுப்பாடல்கள், தனிப்பாடற்றிரட்டுப்பாடல்களும் பெண்ணியமும், தனிப்பாடற்றி ரட்டுப்பாடல்களினூடு அக்காலப் புலவர்களின் உளவியல், சமூகவியல் நோக்கில் தனிப்பாடற்றிரட்டுப்பாடல்கள், அரசியற் பின்னணியும் அக்காலப் புலமைச் செல்நெறியும் இவ்வாறான பல தலைப்புக்களிலே தனிப்பாடற்றிரட்டுப்பாடல்களைப் புலமைச் சிரத்தைக்கு உட்படுத்தக்கூடிய வாய்ப்பு உள்ளது எனக்கூறி உரையை நிறைவுசெய்கின்றேன்.

**அடிக்குறிப்புக்கள்**

1. வேங்கடசாமி, சீனி, மயிலை - பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், சாந்தி நூலகம் - பிராட்வே, சென்னை, முதலாம் பதிப்பு - 1962
2. புறம். 164, சாமிநாதையர்.உ.வே. மூன்றாம் பதிப்பு, 1885 - லாஜர்னல் அச்சுக்கூடம் - யுவவருஷம், சென்னை
3. தனிப்பாடற்றிரட்டு - முதலாம் பாகம், இரத்தினநாயக்கர் அன்சன்ஸ் 1948 - சுப்பிரமணியபிள்ளை. கா. உரை
4. மேலது. கம்பர் - பக. 83. பாடல் - 36
5. மேலது - பக். 81, பாடல் 31
6. மேலது - பக். 86
7. மேலது - பக். 96
8. மேலது - பக். 184
9. மேலது - பக். 229
10. மேலது - பக். 242
11. தனிப்பாடற்றிரட்டு இரண்டாம் பாகம் - பக். 180 - தனிப்பாடற்றிரட்டு இரண்டாம் பாகம் - இரத்தினநாயக்கர் சன்ஸ் - சென்னை 1938, சுப்பிரமணியபிள்ளை.கா - உரை
12. தனிப்பாடற்றிரட்டு முதலாம் பாகம் - பக். 406
13. மேலது - பக். 213 - 214
14. தனிப்பாடற்றிரட்டு இரண்டாம் பாகம் - பக். 4 - 5
15. தனிப்பாடற்றிரட்டு முதலாம் பாகம் - பக். 308
16. மேலது - பக். 414
17. மேலது - பக். 85
18. மேலது - பக். 107
19. தனிப்பாடற்றிரட்டு இரண்டாம் பாகம் - பக். 16

A3904

20. தனிப்பாடற்றிரட்டு முதலாம் பாகம் - பக். 181
21. தனிப்பாடற்றிரட்டு முதலாம் பாகம் - பக். 151
22. மேலது - பக். 182
23. மேலது - பக். 161
24. மேலது - பக். 8 - 9
25. மேலது - பக். 07
26. மேலது - பக். 111
27. மேலது - பக். 132
28. மேலது - பக். 137
29. மேலது - பக். 135
30. மேலது - பக். 202
31. மேலது - பக். 317
32. மேலது - பக். 128
33. மேலது - பக். 413
34. மேலது - பக். 416
35. மேலது - பக். 125

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
290274



சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா வடமராட்சி கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கற்று க.பொ.த. சாதாரணதர பரீட்சையிலே சிறப்பாகச் சித்தியெய்தியவர். சிறிதுகாலம் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலே க.பொ.த. உயர்தரத்திலே பயின்றவர். பாடசாலைக்காலத்தில் அகில இலங்கை ரீதியல் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளிலே பல தங்கப்பதக்கங்களைப் பெற்றவர்.

பண்டிதர் க. வீரகத்தியிடம் இலக்கிய இலக்கணங்களை வரன்முறையாகப் பாடம் கேட்டவர். பாலபண்டிதர், சைவப்புலவர் பரீட்சைகளிற் சித்தியெய்தியவர். மரபுவழித் தமிழ்க்கல்வியின் உள்ளூரத்தோடு நவீன தமிழ்க்கல்வி மரபுக்குள் வந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதற்பிரிவிலே சித்தியெய்தியவர். பேராசிரியர்கள் க.கைலாசபதி, சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், எம்.ஏ.நுஃமான், நா.சுப்பிரமணியன், இந்திரபாலா முதலியோரிடம் பயின்றவர்.

1981ஆம் ஆண்டு உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்ற இவர் பேராசிரியர்கள் க.கைலாசபதி, சு.வித்தியானந்தன் ஆகியோரின் வழிகாட்டலில் சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் பற்றிய ஆய்வினைச் செய்து முதுதத்துவமாணிப் பட்டத்தினைப் பெற்றவர். பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் வழிகாட்டலில் ஈழத்துத் தமிழ் உரைமரபு பற்றி ஆய்வுசெய்து கலாநிதிப்பட்டம் பெற்றவர்.

பத்துக்கும் மேற்பட்ட ஆய்வுநூல்களை எழுதியுள்ள பேராசிரியர் சிவலிங்கராஜா ஐந்து நூல்களின் பதிப்பாசிரியராகவும் விளங்குகின்றர். ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றிலே சிறப்புத்தேர்ச்சி உடைய இவர் சர்வதேச தமிழியல் ஆய்வரங்குகளிலே ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிப் பல ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

இங்கிலாந்து, கனடா, சுவிற்சலாந்து முதலான நாடுகளுக்குக் கல்விசார் பயணங்களை மேற்கொண்ட இவர் சிறந்த சொற்பொழிவாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முப்பது ஆண்டுகளுக்கு மேல் பல்கலைக்கழக ஆசிரியப் பணியில் இருந்த பேராசிரியர் சிவலிங்கராஜா இன்று ஓய்வுபெற்றுப் பேரக்குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவருகின்றார்.

Virus Printers Inuvil